# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ்(சனிக்கிழமை தோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2056, மே 24, 2025 Weekly E-paper ● May 24, 2025




# தலைகீழாய்த் தொங்கும் நீதி!

சுப. வீரபாண்டியன்

## மீண்டும் வேண்டும் மாநிலப் பட்டியலில் கல்வி!

வழக்கறிஞர் இராம.வைரமுத்து

## முதலமைச்சர் ஒரு போராளி!

தலையங்கம்

## திராவிடப் பெருந்தகை சர்.பிட்டி தியாகராயர்

ஞா. கதிரவன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ்(சனிக்கிழமை தோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2056, மே 24, 2025 Weekly E-paper ● May 24, 2025


# தலைகீழாய்த் தொங்கும் நீதி!

## சுப. வீரபாண்டியன்

உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்கு, உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை வழங்கியுள்ள விந்தை ஒன்று அண்மையில் அரங்கேறி உள்ளது! இனிமேல் சென்னை உயர் நீதிமன்றம் ஒரு தீர்ப்பு வழங்கினால், அதை மறு விசாரணை செய்து, ஒரு கீழமை நீதிமன்றம் மறு ஆணை வெளியிடலாம் போலத் தெரிகிறது!

"தீபங்கள் எல்லாம் தலைகீழாய்த் தொங்கும் நம் காலத்தில் ....." என்று ஒரு கவிதையைத் தொடங்குவார் , கவிக்கோ அப்துல் ரகுமான்! நீதிமன்றங்களும் இப்போது தலைகீழாய்த் தொங்குகின்றன!

துணைவேந்தர் நியமன அதிகாரத்தை உச்ச நீதிமன்றம் தமிழ்நாடு அரசுக்கு வழங்கிய பிறகு, அதற்குச் சென்னை உயர்நீதி மன்றம் இடைக்காலத் தடை விதித்திருக்கிறது!

இதுகுறித்து முன்னாள் நீதிபதிகள், மூத்த வழக்கறிஞர்கள் பலரும் தங்களின் விமர்சனங்களை எடுத்து வைத்துள்ளனர். நீதியரசர் அரி. பரந்தாமன் அவர்கள் அடிப்படையாக இரண்டு வினாக்களை முன் வைத்துள்ளார்.

விடுமுறைக் கால நீதிமன்றம், இதனை அவசர வழக்காக எடுத்துக் கொண்டது எந்த அடிப்படையில் என்பதும், திருநெல்வேலியில் உள்ள ஒருவர், மதுரை உயர்நீதிமன்றக் கிளையை நாடாமல், சென்னை உயர்நீதிமன்றத்திற்குச் சென்றது எதற்காக என்பதும் அவர் எழுப்பியுள்ள இரண்டு வினாக்கள் !

பொதுவாக, மதுரை உயர்நீதிமன்றக், கிளை உட்பட, சென்னை உயர்நீதிமன்றத்தில் 45 நீதிபதிகள் இருக்கிறார்கள் என்றால், தென்னிந்திய நீதிமன்றங்களுக்கு விடுமுறைக் காலமான மே மாதத்தில், மூன்று நீதிபதிகள்தான் அமர்வார்கள். அவர்களும் கூட வாரத்திற்கு ஒரு முறைதான் வழக்குகளை விசாரிப்பார்கள். எஞ்சிய வழக்குகளை மறுநாள் விசாரிக்கக் கூடும். அவ்வளவுதான்! எனவே இந்தக் காலகட்டத்தில், வீடு இடிப்பு - ஊதிய நிறுத்தம் - போன்ற அவசரமான வழக்குகள் மட்டும்தான் விசாரிக்கப்படும்! மே மாதத்திற்குள் முடிவெடுக்கவில்லை என்றால், நீதி தவறிக் கெடும் என்று கருதப்படும் நிலையில்தான் வழக்குகள் விசாரிக்கப்படும். இல்லையானால், வழக்கமான நீதிமன்றத்தில் ஜூன் மாதம் அவற்றை எடுத்துக் கொள்ளலாம்!

இப்போது பல்கலைக்கழகத் துணை வேந்தர்கள் தொடர்பான இவ்வழக்கு, மே மாதமே விசாரிக்கப்பட வேண்டும் என்று எந்தக் கட்டாயமும் இல்லை! துணைவேந்தர்களுக்கான தேர்வுக் குழுவே இன்னமும் நியமிக்கப்படவில்லை. இந்த வழக்கில் எந்த அவசரமும் இல்லை. ஆனால் இதனை விடுமுறைக் காலத்தில் அவசர வழக்காக எடுத்துக் கொண்டு, விடை தருவதற்குத் தமிழ்நாடு அரசுக்கு உரிய கால அவகாசம் கொடுக்கவும் நீதிமன்றம் மறுத்திருக்கிறது!

இரண்டாவதாக, திருநெல்வேலியைச் சேர்ந்த பாஜகவின் நிர்வாகி ஒருவர், இந்த வழக்கை தொடுத்திருக்கிறார். அவர் மதுரை உயர்நீதிமன்றக் கிளையைப் புறக்கணித்துவிட்டு, சென்னை உயர்நீதிமன்றம் நோக்கி சென்றதற்கான காரணம், நீதியை நீதிமன்றம் தேர்ந்தெடுப்பதற்குப் பதிலாக, நீதிபதியை மனுதாரர் தேர்ந்தெடுத்து இருக்கிறாரோ என்ற எண்ணம் வருகிறது!

இந்த நிலை நீதிக்கும் நல்லதில்லை, நாட்டுக்கும் நல்லதில்லை!

●



தமிழ்நாடு அரசு நிறைவேற்றிய பல்கலைக்கழகத்துணைவேந்தர் நியமனம் குறித்து உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்புக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்பைக் கண்டித்துக் கோவை பிஎஸ்என்எல் அலுவலகத்திற்கு எதிரே திராவிட இயக்கத் தமிழர் பேரவை, துணைப் பொதுச்செயலாளர் தலைமையில் 23-05-2025 அன்று ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். உடன் திராவிடத் தமிழர் கட்சித் தலைவர் வெண்மணி தன் தோழர்களுடன் பங்கேற்றார்.

# மீண்டும் வேண்டும் மாநிலப் பட்டியலில் கல்வி!

## வழக்கறிஞர் இராம.வைரமுத்து

இந்திய அரசியல் நிர்ணய சபையில் அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கிய போது கல்வியை ஒன்றிய பட்டியல், மாநில பட்டியல், ஒத்திசைவு பட்டியல் ஆகியவற்றில் எதில்சேர்ப்பது என்பது குறித்து ஆழமான விவாதங்கள் நடைபெற்றன. முடிவில் கல்வி மாநில பட்டியலில் இருப்பதே சரி என்று உறுதி செய்யப்பட்டு மாநில பட்டியலில் சேர்க்கப்பட்டது.



1976 ஆம் ஆண்டு இந்தியாவில் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டப் போது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் மேற்கொள்ளப் பட்ட 42 ஆவது சட்டத் திருத்தம் மூலமாக 57 ஆவது பிரிவில் இருந்த கல்வி மாநிலப் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுப் பொதுப் பட்டியலில் சேர்க்கப்பட்டது. அப்போதே தமிழ்நாடு போன்ற சில மாநிலங்களில் இதற்கான எதிர்ப்புக் குரல் எழுந்தது.

1976ஆம் ஆண்டுக்கு முன்பு கல்வி இந்திய அரசியலமைப்புச் சட்டம் 246 ஆவது பிரிவில் ஏழாவது அட்டவணையில் பட்டியல் இரண்டில் (மாநில பட்டியல்) இருந்த போது பாடத் திட்டம், பாடத் தொகுப்பு, மாணவர் சேர்க்கை போன்ற கல்வி மீதான அனைத்து முடிவுகளையும் எடுக்க மாநிலங்களுக்கு உரிமை இருந்தது. ஒருங்கிணைப்பு மற்றும் உயர் கல்வித் தரப் பராமரிப்பு மட்டுமே ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் இருந்தது. ஆனால் இந்த 42 ஆவது சட்டத் திருத்தத்தின் மூலம் ஒன்றிய அரசு கல்வியில் தலையிட வழி ஏற்பட்டதால் நீட், புதிய தேசிய கல்வி கொள்கை, மும்மொழிக் கொள்கை போன்ற அச்சுறுத்தல்கள் தற்போது உருவாகி உள்ளது.

காங்கிரஸ் ஆட்சி காலத்தில் தான் கல்வி ஒத்திசைவு பட்டியலுக்கு மாற்றப்பட்டது என்று கூறி தப்பிக்கப் பார்க்கிறது பா.ஜ.க. ஆயினும் அதன் பின் நடைபெற்ற காங்கிரஸ் ஆட்சி காலங்களில் கல்விக்குப் பெரும் அச்சுறுத்தல் எதுவும் ஏற்படவில்லை. 2014 இல் மோடி தலைமையிலான அரசு அமைந்த பிறகு ஒத்திசைவுப் பட்டியல் என்பதை ஒன்றிய அரசு பட்டியல் என்று எண்ணிக் கொண்டு கல்வித் துறையில் தான்தோன்றித் தனமாக முடிவுகளை எடுத்து வருகிறது.

கல்விக் கட்டமைப்பில் சிறந்து விளங்கும் தமிழ்நாடு இதனால் பெரும் சிரமத்திற்கு ஆளாகிறது. 2005 இல் அமல்படுத்தப்பட்ட "அனைவருக்கும் கல்வி" திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசு விடுவிக்க வேண்டிய ரூ.2192 கோடி நிதியை விடுவிக்க 2020 இல் அறிவிக்கப்பட்ட தேசிய கல்விக் கொள்கையை ஏற்று கையெழுத்திட வேண்டும் என்று நிபந்தனை விதிப்பது சர்வாதிகாரத்தின் உச்சம். இதற்காக தமிழ்நாடு அரசு உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்தியா போன்ற பன்முக தன்மை கொண்ட ஒரு ஒன்றியத் துணை கண்டத்தில் ஒவ்வொரு மாநிலத்திற்கும் மொழி, கலாச்சாரம், பண்பாடு என்று எல்லாம் மாறக் கூடிய ஒரு ஒன்றியத்தில், அந்தந்த மொழிவழி மக்களோ அல்லது அவர்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட மாநில அரசோ அவர்களுக்கானக் கல்வி திட்டத்தை முடிவு செய்வதே சரியான நடைமுறையாக இருக்கும். அப்போது தான் கல்வி அந்த மொழிவழி இனத்தின் வாழ்கை முறை, பண்பாடு, கலாச்சாரம், வரலாறு ஆகியவற்றை சார்ந்ததாக இருக்கும்.

கல்வி மீண்டும் மாநில பட்டியலுக்கு மாற்றப்பட வேண்டியதன் அவசியத்தை மக்களிடம் கொண்டு சென்று எழுச்சியை ஏற்படுத்த வேண்டும். "எங்கள் கல்வி எங்கள் உரிமை" என்ற முழக்கம் ஒருமித்து ஒலிக்கட்டும். வருங்கால சந்ததியின் வளமான எதிர்காலத்திற்காகக் கல்வியைக் காப்பாற்றுவோம்.

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## முதலமைச்சர் ஒரு போராளி!



தமிழ்நாட்டிற்கு உரிமையான நிதியை ஒன்றிய அரசு தராமல் இருப்பதனால், முதலமைச்சர் என்ற முறையில் நிதி ஆயோக் கூட்டத்தில் கலந்துகொள்ள டில்லி செல்கிறார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

இதில் ஊர்ந்து சென்று கால் பிடித்து அரசியல் செய்யும் எடப்பாடி பழனிச்சாமிக்கு என்னவந்தது? டாஸ்மாக் அமலாக்கத்துறை சோதனையால், சுயநலத்தோடு டில்லி செல்கிறாராம் முதல்வர்? சொல்கிறார் இந்த சரணாகதிப் பழனிச்சாமி.

பாஜகவுடன் ஒட்டும் இல்லை, உறவும் இல்லை என்பார். மறுநாள் டில்லியில் முக்காடிட்டுக் 'கார்'களில் மாறிமாறிச் சென்று சரணாகதி அடைவார் அமித்ஷாவிடம், பாஜாகவுடன் கூட்டணி என்பார். இதில் அவரின் சுயநலம் இல்லையா?

அந்தப் பழனிச்சாமிக்கு ஸ்டாலினைப் பற்றிப்பேச என்ன தகுதி இருக்கிறது?

தேர்வு எழுதும் முன் விடை சொல்வதுபோல முதலில் 1000 கோடி ஊழல் என்றார்கள், பிறகு விசாரணை செய்கிறார்கள், என்ன ஆவணங்கள், எவ்வளவு பணம் அல்லது என்னதான் கைபற்றினார்கள் அமலாக்கத் துறையினர் டாஸ்மாக்கிடம் என்று இதுவரை ஒன்றுமே சொல்ல வில்லையே! அதற்குள் துள்ளிக் குதிக்கிறார் பழனிச்சாமி.

சரி! அது கிடக்கட்டும். இன்று பாஜகவுடன் கூட்டணி வைத்திருக்கும் எடப்பாடி மோடி, அமித்ஷாவிடம் சொல்லி 'நீட்' தேர்வை ரத்து செய்திருக்கலாம், தமிழ்நாட்டிற்குக் கொடுக்க மறுக்கும் நிதியையாவது பெற்றுத் தரலாமே, ஏன் அதை அவர் செய்யவில்லை? அவரும் செய்யமாட்டார், அடுத்தவரையும் செய்யவிட மாட்டார்.

ஒரு எதிர்க்கட்சித் தலைவர் பொறுப்பில் இருப்பவர் தரமான அரசியல் பேசவேண்டும்.

எடப்பாடியைப் போல உப்புக்கும், புளிக்கும் உதவாத கதைகளைப் பேசிக்கொண்டு இருக்கக்கூடாது!

ஸ்டாலின் போராடுகிறார், அவர் போராளி!
எடப்பாடி போடுகிறார், சரணாகதி!

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408




# திராவிடப் பெருந்தகை சர்.பிட்டி தியாகராயர்

ஞா. கதிரவன், திராவிடப் பள்ளி மாணவர்.

"ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்

பேரறி வாளன் திரு",

இக்குறளுக்குக் கலைஞர், "பொதுநல நோக்குடன் வாழ்கின்ற பேரறிவாளனின் செல்வமானது ஊர் மக்கள் அனைவருக்கும் பயன் தரும் நீர் நிறைந்த ஊருணியைப் போன்றதாகும்" என்று உரை சொல்கிறார்.



இந்தக் குறட்பாவில் 'பேறறிவாளன்' என்று வள்ளுவர் குறிப்பிடுவதற்கான வரையறை, அதிகம் அறிவு உடையவர், அல்லது அதிகம் பட்டம் பெற்றவர் என்பதல்ல! தான் பெற்ற அறிவையும், செல்வத்தையும் யார் ஒருவர் சமூகத்தின் வளர்ச்சிக்காகப் பயன் படுத்துகிறாரோ அவரைத் தான் வள்ளுவர் பேரறிவாளன் என்று குறிப்பிடுகின்றார்!

அவ்வகையில், தான் கற்ற கல்வி, ஈட்டிய பொருள், வகித்த பதவிகள் உட்பட அனைத்தும் அன்றைய மதராஸ் மாகாணத்தின் சமூக, கல்வி, பொருளாதார வளர்ச்சிக்காகப் பயன்படுத்திய திராவிடப் பெருந்தகை சர். பிட்டி தியாகராயர், ஒரு முன்னோடியாக, பேரறிவு உடையவராக இன்றும் நம் நினைவில் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்.

சர். பிட்டி. தியாகராயர், சென்னை கொருக்குப் பேட்டையில் வாழ்ந்த அய்யப்பனார் - வள்ளியம்மாள் இணையருக்கு மூன்றாவது மகனாக 1852ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 27ஆம் நாள் பிறந்தார். சென்னை மாநிலக் கல்லூரியில் பயின்று இளங்கலைப் (B.A.) பட்டம் பெற்றார். தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, கன்னடம், இலத்தீன், பிரெஞ்சு, உருது ஆகிய மொழிகள் கற்றுத் தேர்ந்திருந்தார். 1882ஆம் ஆண்டு நடைபெற்ற நகர அவைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்! அதைத் தொடர்ந்து 1925 வரை நாற்பத்திரண்டு ஆண்டுகள் தொடர்ந்து நகரவை உறுப்பினராக இருந்தார்.

சென்னை மாகாணச் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். தியாகராயர் தமது சொந்த வருமானத்தில், வண்ணாரப்பேட்டையில் "வடசென்னை நடுநிலைப்பள்ளி" யினை 3.12.1897இல் தொடங்கினார். ஏழை மாணவர்களுகாக 'மதிய உணவு'த் திட்டத்தைக் கொண்டு வந்து வயிற்றுப் பசியையும், அறிவுப் பசியையும் தீர்க்கும் மாமனிதராக விளங்கினார்.

சர்.தியாகராயர், மக்களிடைய செல்வாக்கு மிக்கவர். ஆனாலும், சென்னை மயிலை கோயில் விழாவில் உரிய மதிப்பினைப் பார்ப்பன விழாக் குழுவினர், அவர், சூத்திரர் என்பதால் தராது அவமதித்துவிட்டனர். அதனால் வெகுண்டு வெளியேறிய தியாகராயர், டி எம் நாயர், நடேசனார் உள்ளிட்டோருடன் இணைந்து பார்ப்பனரல்லாதார் நலன்களைக் காப்பதற்கு வழிகாண வேண்டும் என்ற உயரிய நோக்கோடு, 1916 நவம்பர் 20ஆம் நாளன்று சென்னை விக்டோரியா பொது அரங்கில், "தென்னிந்தியர் நல உரிமைச் சங்கம்" என்ற அரசியல் அமைப்பினைத் தொடங்கி அதன் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார் அந்த அமைப்பே பின்னாளில் நீதிக் கட்சி என பெயர் பெற்றது.

நீதிக் கட்சி சார்பாக வெளியிட்ட 'பிராமணரல்லாதார் கொள்கை விளக்க அறிக்கை', பார்ப்பனரல்லாத மக்களிடையே பெருமளவிற்கு விழிப்புணர்ச்சியைத் தோற்றுவித்தது. அவர்கள் இயக்கத்தின் கொள்கைகளுக்கும் திட்டங்களுக்கும் பேராதரவு தந்தனர். நீதிக்கட்சி பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினருக்கு முழு உரிமை வேண்டும் என்றும், அரசுப் பணிகளிலும், கல்வியிலும் இடஒதுக்கீடும் வழங்க வேண்டும் என்று கோரியது. நீதிக்கட்சி 1920 நவம்பர் 20இல் நடைபெற்ற மாகாணத் தேர்தலில் போட்டியிட்ட 98 இடங்களில் 63 இடங்களில் வென்று மதராஸ் மாகாணத்தில் ஆட்சியமைத்தது.

மாகாண வளர்ச்சிக்கு ஈடு இணையற்ற பங்களிப்பைச் செய்த தியாகராயர் 28.4.1925 அன்று மறைந்தார். இன்று நம்முடைய முதலமைச்சர் நீதிக் கட்சியின் நீட்சி தான் இந்த ஆட்சி என்று சொல்கிறார்.

தியாகராயர் விட்டுச் சென்ற பணிகளை திராவிட இயக்கம் காலங்காலமாக தொடர்ந்து வருகிறது! அதன் ஒரு பகுதியாக நாமும் நின்று திராவிடப் பெருந்தகை சர். பிட்டி தியாகராயரின் புகழ் பாடுவோம். ●

## ஐயா இராம.சுப்பையா அவர்கள் நினைவஞ்சலி



**மே திங்கள் 21ஆம் நாள், திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்களின் தந்தையார் காரைக்குடி இராம. சுப்பையா அவர்களின் நினைவு நாள்.**

**1930 களில் சாதிக் கட்டுப்பாடும், பெரும்பக்திக் கலாச்சாரமும் மிகுந்த செட்டிநாட்டுப் பகுதியில், சாதி மறுப்புத் திருமணங்களை ஊக்குவித்து, சுயமரியாதை - பகுத்தறிவுப் பணிகளை அவரின் துணைவியாருடன் இணைந்து மேற்கொண்டவர். பெரியாரின் பெருந்தொண்டராக இருந்து, 1949இல் திமுக கழகம் தொடங்கிய நேரத்தில் அறிஞர் அண்ணா அவர்களோடு நின்றவர். 1953 கல்லக்குடி ரயில் மறியல் போராட்டத்தில் பங்கேற்றுக் கலைஞருடன் சிறை சென்றவர். 1957-இல் காரைக்குடி தொகுதியில் ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்களை எதிர்த்துக் களம்காண அண்ணா பணித்தபோது அதனை தட்டாமல் ஏற்றுக் கொண்டவர். அதனைத் தொடர்ந்து தேர்தல் களங்களில் திமுகழகத்திற்கு வாக்கு சேகரிப்பாரே தவிர வேட்புமனு செய்ததில்லை.**

**அவரின் 117 ஆம் நினைவாண்டில், போற்றுவோம்.**

**-பொள்ளாச்சி மா.உமாபதி.**

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian